சுபக்ருத் ஸூ புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2022

மலர்: 5
இதழ்: 6

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





ஸ்ரீ:

சுபக்ருத் ஸூ புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2022

மலர்: 5
இதழ்: 6

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

**வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |**
**வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||**

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

சென்ற மாதம் நம் ஸந்நிதியில் நடந்த இரு நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் –

- ஒன்று, மூன்று தினங்கள் அநுஷ்டிக்கப்பட்ட ‘வாக் யஜ்ஞம்‘ எனும் சொல்மாலையால், வேத ப்ரதிபாத்யனான வேங்கடேசனைக் குறித்து ஸமர்ப்பிக்கப்பட்ட ஸர்வ வேத பாராயண கைங்கர்யம்;
- இரண்டு, ஸர்வேச்வரியும், மோக்ஷம் வரையிலான ஸகல போகங்களை நல்குபவளுமான லக்ஷ்மியை உத்தேசித்து அநுஷ்டிக்கப்பட்ட ‘ஸ்ரீஸூக்த யஜ்ஞ’மும் (ஜாத வேதனான எம்பெருமானிடம் ‘லக்ஷ்மீம் ஆவஹ’ என்று ப்ரார்த்திக்கும் ஸ்ரீஸூக்த வாக்யத்தை நினைக்கவும்).

இந்த வைபவங்களை நேரில் அநுபவித்தவர்களும், இந்த ஸஞ்சிகையில் வெளியாகும் புகைப்படங்கள் மூலமாக கண்டு களிப்பவர்களும் ‘விண்ணும் ஆள்வர் மண்ணூடே’.

Come September; நாம் அனைவரும் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கும் ‘உத்தமமான புரட்டாசி’. ஆம், நம் தூப்புல் துரந்தரரை அவதரிப்பித்து சிறப்புபெறும் திங்களாயிற்றே! இரு ஆண்டுகளாக எளிய முறையில் அநுஷ்டிக்கப்பட்ட தேசிக வார்ஷிக உத்ஸவம், இவ்வாண்டு பழைய வைபவத்துடன் நடக்கப்போகிறது. அது மட்டும் போதாதுபோலும் அறங்காவலர்களுக்கு. முன்பைவிட சிறப்புற நடத்த வேணும் எனும் அவா எழுந்தது; ‘‘ஈஷத் த்வத் கருணா நிரீக்ஷண ஸுதா ஸந்துக்ஷணாத... த்ரிபுவனம் ஸம்ப்ரதி அனந்தோதயம்’’ (பிராட்டியே! உன் கடைக்கண் அமுதத் துளியால் இவ்வுலகம் இனி எல்லையற்ற சிறப்பை அடையும் – சதுஸ்.3) எனும் ஆளவந்தாரின் அமுதமொழி நினைவுக்கு வந்ததோ என்னலாம்படி, பூர்வாங்கமாக பிராட்டியின் அருளை வேண்டி ஸ்ரீஸூக்த ஹோமம் செய்வித்திருக்கிறார்கள்.

புரட்டாசி பிறந்தது. திருவோணத்துக்காக அனைவரும் எதிர்நோக்கி இருக்கிறோம். அரவிந்த லோசனின் மனத்துக்கு இனியவர்கள் இருவர் – ஒருவர் பிராட்டி; மற்றொருவர், ஸ்வாமி தேசிகன். அன்னாரின் ஆண்டுவிழாக் காண அடியார் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சிறப்புக் கட்டுரைகள் மற்றும் தொடர்களுடன் கீழ்க்காணும் ஆவணி மாத உத்ஸவங்களின் வண்ணப்படங்களையும் தாங்கி இந்த மாத இதழ் உங்கள் கையில்.

- ✓ ஸ்ரீஜயந்தீ மற்றும் உறியடி உத்ஸவம்
- ✓ வேத ஸம்மேளனம்
- ✓ ‘ராமாநுஜ தயா பாத்ரம்’ தனியன் அவதார உத்ஸவம்
- ✓ ஸ்ரீ அலர்மேல்மங்கைத் தாயார் லக்ஷார்ச்சனை
- ✓ ஸ்ரீஸூக்த ஹோமம்
- ✓ கடை ச்ரவணம்

கண்டு வாசித்து இன்புறுமின்!

ஸ்ரீ:

# A Month That Beckons Acharya's Avathara

## FROM THE DESK OF TRUSTEES



The significance of the month Purattasi in the Srivaishnava tradition is that it is almost exclusively dedicated to Srinivasa, the Lord of Tirumala. Legend says that the Lord descended on the Seven Hills on a Saturday coinciding with the star Sravanam on this month, lending auspiciousness to the day as well as the star. Srivari Brahmotsavam, as it is famously known as, is the most important annual festival celebrated in the Divyadesam.

It is a double delight for the devotees of the Sri Sampradaya as Purattasi-Sravanam is also the Thiru Avathara Day of the illustrious Acharya Sri Vedantha Desika. The peerless preceptor propagated the doctrine of Saranagathi, the quintessence of Srivaishnavam, through his masterly works numbering over 120 in Sanskrit, Tamil and Prakruth, besides Manipravalam (a mixture of two languages – Sanskrit and Tamil).

The 10-day Vaarshika Mahotsavam of Swami Desika, concluding with a grand Satrumurai, will be celebrated in our temple this year with the grandeur of the old with Vahanams and Thiruveethi Purappadu from Sept. 26 to Oct. 5. It may be recalled that the event was constricted to Ul Purappadu in the last two years owing to Covid regulations.

The nine-day Navarathri festival, which will be held alongside Sri Desikan Utsavam, is another highlight of the month. The Divya Dampathis, adorning the attire and make over of idols of various Divyadesams each day and parading in Pathi Ulathal, and the Kannaadi-Arai Sevai are charming features at our Devasthanam. As Poigai Azhwar avers, தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே, தமருகந்தது எப்பேர் மற்றப்பேர்... (Mudhal Thiruvanthaadhi - 44).

The annual purification event Pavitrotsavam, which provides devotees the opportunity to circumambulate the Yagasala, the deities and Ubhaya-Veda, Ithihasa, Grantha Parayana Goshti together, is a unique festival for the month at our Devasthanam (Oct. 9 to 15).

During the month of Aavani, festivals like Srijayanthi, Uriyadi Utsavam, Sri Hayagriva Jayanthi, the Avathara Dina Utsavam of the Thaniyan 'Ramanuja Daya Paathram' and Kadai Sravanam were celebrated.

Chanting of the Vedas anywhere brings in auspiciousness and positive vibes. The results are manifold in case of Chatur-Veda Parayanam when conducted in a temple. Our Devasthanam organised one from Aug. 26 to 28 wherein around 30 scholars participated. The other events held for the wellbeing of the world at large (Loka Kshemam) were Laksharchanai to Sri Alarmelmangai Thayar (on Sept. 2 and 3) and Srisuktha Homam (Sept. 4). These were performed by the Archakas of our Devasthanam in collaboration with those from a few Divyadesams.

As was done in the previous years, the Devasthanam is planning to distribute Prasadams throughout Purattasi Saturdays and devotees are requested to receive the blessings of the Divya Dampathis and partake of the Prasadams.

ஸ்ரீ:

# சுபக்ருத் வருட புரட்டாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில ததி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| செப்டம்பர் / அக்டோபர் | புரட்டாசி | | | | | |
| 18-9-2022 | 1 | அஷ்டமி | ஞாயிறு | ம்ருகசீர்ஷம் | ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள் | |
| 19-9-2022 | 2 | நவமி | திங்கள் | திருவாதிரை | ஸ்ரீ பாஷ்யகாரர் | |
| 20-9-2022 | 3 | தசமி | செவ்வாய் | புனர்வஸூ | ஸ்ரீ குலசேகர ஆழ்வார் | |
| 21-9-2022 | 4 | ஏகாதசி | புதன் | புஷ்யம் | பெருமாள் | |
| 22-9-2022 | 5 | த்வாதசி | வியாழன் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 23-9-2022 | 6 | த்ரயோதசி | வெள்ளி | மகம் | ஸ்ரீ திருமழிசை ஆழ்வார் | |
| 24-9-2022 | 7 | சதுர்தசி | சனி | பூரம் | திருமால்வடை | |
| 25-9-2022 | 8 | அமாவாசை | ஞாயிறு | உத்தரம் | ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் கண்ணாடியறைக்கு எழுந்தருளல் | |
| 26-9-2022 முதல் 5-10-2022 வரை | | | | | ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவம் | |
| 26-9-2022 முதல் 4-10-2022 வரை | | | | | நவராத்ரி உத்ஸவம் | |
| 5-10-2022 | 18 | | புதன் | ச்ரவணம் | மாலை - விஜய தசமி - குதிரை வாஹனம் புறப்பாடு | ஸ்ரீ A.R. ஸந்தான க்ருஷ்ணன் - ஸ்ரீ A.K. முத்துஸ்வாமி |
| 6-10-2022 | 19 | ஏகாதசி | வியாழன் | அவிட்டம் | காலை ஸ்வாமி தேசிகன் கந்தப்பொடி வஸந்தம்; மாலை விடாயாற்றி உத்ஸவம் முதல் நாள். பெருமாள் ஏகாதசி திருமஞ்சனம். மாலை புறப்பாடு | தேசிகன் உத்ஸவம்: காலை ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ பாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் (பதிவு). மாலை: ஸ்ரீமதி ஸுபத்ரா பாலாஜி குடும்பத்தினர் |
| 7-10-2022 | 20 | த்வாதசி | வெள்ளி | சதயம் | காலை ஸ்வாமி தேசிகன் திருமஞ்சனம். விடையாற்றி ஆஸ்தானம் 2ம் நாள். மாலை பவித்ரோத்ஸவம் அங்குரார்ப்பணம். ஸேனைநாதன் வீதி புறப்பாடு | தேசிகன் உத்ஸவம்: ஸ்ரீ S. ஸுந்தரம். அங்குரார்ப்பணம்: K.L. ராமதுரை |
| 8-10-2022 | 21 | சதுர்தசி | சனி | பூரட்டாதி | அதிவாஸம். ஹோமம் இரவு 7 மணி | ஸ்ரீ அத்திகிரி அருளாளன் |
| 9-10-2022 முதல் 15-10-2022 வரை | | | | | திருப்பவித்ரோத்ஸவம் | |
| 16-10-2022 | 29 | ஷஷ்டி | ஞாயிறு | திருவாதிரை | ஸ்ரீ பாஷ்யகாரர் | |
| 17-10-2022 | 30 | ஸப்தமி | திங்கள் | புனர்வஸூ | ஸ்ரீ ராமர் திருமஞ்சனம். மாலை ஸேவாகாலம், சாற்றுமுறை | V.D.R. பண்ட் |

# பிள்ளைத்தமிழுக்கு வித்திட்ட பெரியாழ்வார்

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

சென்ற இதழில் இரண்டு பருவங்களைப் பெரியாழ்வார் கண்ணோட்டத்தில் கண்டோம். இன்று நாம் இலக்கணமுறையில் வைத்துக்கொண்டிருக்கும் மரபிலிருந்து எந்தெந்த பருவங்களை விடுத்து மேலும் எந்தெந்த பருவங்களைச் சேர்த்துள்ளார் என்பதையும் சேர்த்து கண்ணனின் பிள்ளைப்பருவத்துடன் உள்ள பருவங்களை இந்த இதழிலும் அனுபவிக்கலாம்.

**3. அம்புலிப்பருவம்**

அம்புலி என்பது சந்திரனைக் குறிக்கும். விண்ணில் விளங்கும் சந்திரனை விளையாட வருமாறு அழைக்கும் பருவமே அம்புலிப் பருவமாகும். இன்றைய இலக்கியக்காரர்கள் பிள்ளையின் பதினைந்தாம் திங்களில் இது நிகழ்வதாகக் கொள்கிறார்கள். நடக்கக் கற்றுக் கொண்ட குழந்தை அங்குமிங்கும் சென்று காட்சிகளைக் காண மிகுதியாக விரும்பும். ‘பிள்ளைக்கலிக்குஅம்புலியாம்’ (கலிஒலி) என்பதன் மூலம் இப்பருவத்தின் சிறப்பை உணரலாம். வெண்ணிலவை குழந்தையுடன் விளையாட வருமாறு அழைக்கும் பொழுது

1. குழந்தையுடன் சரி நிகராக அம்புலியை எண்ணுதல்
2. அம்புலியும் குழந்தையும் வேறுபடுதல்
3. விளையாட வருவதனால் ஏற்படும் நலன்களைக் கூறுதல்
4. வருந்தி அழைத்தும் வரவில்லையாயின் இன்ன தண்டனை பெறுவாய் என்று கூறுதல்

என ஸாம தான பேத தண்ட முறையில் அமைவது இப்பருவமாகும். அவ்வாறு அழைக்கும் பொழுது சிலேடை முதலிய அணி இலக்கணங்கள் அழகுற அமைத்துப் பாசுரமிடுவர்.

பெரியாழ்வார், சென்ற தாலப்பருவத்தில் கண்ட கண்ணன் தவழ்ந்து விளையாடும் பருவம் வந்ததும் நிலா முற்றத்திலே நின்று அம்புலியை அழைத்துக் களிப்பதை யசோதை காண்கிறாள் என்று கொண்டு மிகவும் ரஸமாகப் பத்துப் பாசுரங்களை அமைக்கிறார்.

முதல் பாடலிலேயே யசோதை, சந்திரனைப் பார்த்து, இளமையோடு கூடிய சந்திரனே! உன்னிடம் கண்கள் இருக்கின்றனவானால் நீ இவ்விடத்தில் தன்னுடைய திருமுகத்தில் தொங்கும் சுட்டியென்னும் ஆபரணம் அசைய பொன்னால் செய்யப்பட்ட சதங்கைகள் ஒலியெழுப்பும்படி முழங்காலாலே தவழ்ந்து முற்றத்துக்குச் சென்று பொடிமண்ணை அள்ளிச் சொரிகின்ற என்னுடைய மகன் கோவிந்தனின் கூத்தை நன்றாகப் பார்த்துப் போ என்று சொல்வதாகப் பாசுரமிடுகிறார்.

இப்பாசுரத்தில் சந்திரனை இளமாமதீ என்று அழைத்திருப்பது மிகஸ்வாரஸ்யம்! மாமதீ என்றதால் பூர்ணசந்திரனைக் குறிக்கிறார் என்றாயிற்று. அந்த பூர்ணசந்திரனுக்கு இளமை அப்போது அது உதித்திருப்பதுதான். இரண்டையும் சேர்த்து இளமாமதீ என்றார் பெரியாழ்வார்.

அடுத்த பாசுரத்தில், அழகிய சந்திரனே! எனது கண்ணனானவன் தன்னுடைய சிறிய கைகளினாலே உன்னையே பலமுறை சுட்டிக்காட்டி அழைக்கின்றான். நீ வெண்ணிறமானவன்; இவனோ அஞ்சன வண்ணமானவன்; நீ வந்து சேருவாயானால் அந்த சேர்த்தியே மிக அழகாகயிருக்கும். அந்த அஞ்சன நிற மேகம் உன்னை மறைக்கும் ஆனால் இந்த அஞ்சன வண்ணன் உன்னை எடுத்துக்காட்டுவான் என்ற பொருள்பட, அஞ்சன வண்ணனோடு ஆடல் ஆட உறுதியேல் மஞ்சில் மறையாதே என்று பாசுரமிட்ட அழகு நெஞ்சில் நிறுத்தி ரஸிக்கத்தக்கது!

மூன்றாம் பாசுரத்தில், யசோதை அழைத்தும் இறங்கி வராத சந்திரன், **என்னுடைய குளிர்ச்சியான மண்டலத்தையும், நிலவான என்னழகையும் பார்! எனக்கு ஒப்பாகாதவனோடு விளையாட என் மனம் ஒப்புமா?** என்று கேட்க, பெரியாழ்வார் யசோதையாக பதிலளிக்கிறார். ஒளிவட்டம் சூழாமலும் சோதி பரவாமலும் நீ இருப்பதுண்டு! இன்றிருக்கும் இந்த சோதி உன்னுடையதா? பிறரிடமிருந்து கொண்ட பிச்சையன்றோ? ஒருக்கால் இவையெல்லாம் நிஷ்களங்கமாக உனக்கே இயற்கையாயானாலும் என்னுடைய மகனின் திருமுகமண்டலும் என்ற ஒரு அவயவத்திற்கு நீ ஒப்பாகமாட்டாய்! ஆகவே அவன் முகம் உனக்கு மேலானதாகும்; உன்னை எட்டிப்பிடிக்க இப்போதே திருமலையில் ஏறி நின்று உன்னை அழைக்கின்றான். உன்னைப்போல் அவன் அலைகின்றவன் இல்லை. எப்போதும் திரியும் உன்னைவிட விசித்ரசக்தி உள்ளவனான வேங்கடவாணனா குறைந்தவன்? ஆதலால் சுகுமாரனான அவன் நோயுறாதபடி, அவன் வேண்டாமென்று சொல்லும் முன் விரைந்து ஓடிவா என்கிறார்.

நான்காம் பாசுரத்தில் யசோதை, விசாலமான கண்கள் மலரும்படி திறந்து என்மகன் உன்னையே குறித்துக்

காண்பிக்கின்றான், நீ பிள்ளைகள் பெற்றிலாத மலடில்லையென்றால், கபடம் செய்யாமல் வந்து சேர், என்கிறாள். சக்கரக்கையன் என்று கண்ணனுக்கு அடைமொழியிட்டு அவன் சக்கரத்துக்குப் பயந்தோ, கபடம் செய்தோ வராமல் பரிவுடன் வருவாய் என்று குழந்தையின் மேலுள்ள ஆசையினால் விளையாட வாவென்று அழைக்கும் அழகு பெரியாழ்வாருக்கே உரியது!

அடுத்து ஐந்தாம் பாசுரத்தில் நீ பதினாறு கலைகளும் நிரம்பி நின்றாலும், உறுப்புக் குறையுடையவன் என்று யசோதை சந்திரனைப் பார்த்துச் சொல்கிறாள், விழித்தான் சந்திரன். விளங்க பதிலளிக்கிறாள்; என் மகன் கூவியழைப்பது உன் காதில் விழவில்லை என்றால் நீ செவிடன்தானே? என்று. பெரியாழ்வாரின் புழையில ஆகாவே நின் செவி – உன் காதுகள் துளையில்லாதவைகள் ஆகாவோ? என்றது வராவிட்டால் காது தூர்க்கும் என்று சொல்வதாகவும் அமைந்தது அழகு!

ஆறாம் பாசுரத்தில் பெரியாழ்வார் தாய்பாவத்தில் பாசுரமிடுவதால் குழந்தை கொட்டாவி விடுவதைக் கண்டு அம்புலியை, என்மகன் தூங்க முற்படுகிறான்; அவன் அவ்வாறு தூங்காவிட்டால் ஸ்தன்யபானம் செய்த பால் ஜீர்ணமாகாது; ஆதலால் அவன் உறங்கும் முன் விரைந்தோடிவா என்கிறார். எம்பெருமானுக்கு விசேஷணமாக தண்டொடு சக்கரம் சார்ங்கமேந்தும் தடக்கையன் என்று சொல்லி, உறங்கும் போதும் ஆயுதங்களை ஏவ வல்லவன் என்று சொல்வதோடு இவன் உனக்காக விழித்துக் காத்திருக்கமாட்டான் விரைந்தோடி வா என்றும் பொருள் தொனிக்கும் படி பாசுரமிட்டார்.

ஏழாம் பாசுரத்தில் இவனைச் சிறுவன் என்று நினைத்து அவமதிக்க வேண்டாம். முன்னொருகாலத்தில் ப்ரளயத்தில் ஆலிலையில் பள்ளிகொண்ட சிறுபாலகனான அந்த முகுந்தனே என் மகனாக அவதரித்துள்ளான். இவன் மேலெழுந்தால் பாய்ந்து உன்னைப் பிடித்துக் கொள்வான்; அவனது பெருமையைத் தள்ளாமல் அவனுடைய எழிலைக் கண்டு களித்து ஓடிவா மாமதி! என்று பாசுரமிடுகிறார்.

மாமதியே, இளஞ்சிங்கமான என் குழந்தையை இவன் சிறுவன்தானே என்று பரிஹஸிக்காதே! சிறுமையினால் வந்த உன் குற்றத்தை அவன் அறிந்தானாகில் உனக்குத்தான் பாதகம். இக்குட்டித் முன்னொரு காலத்தில் தன் இளமையில் செய்த காரியத்தை மஹாபலியிடம் சென்று கேட்டுத் தெரிந்துகொள். அப்படித் தெரிந்து கொண்டாயாகில் நீயும் மேதாவியாய் இருந்து உன் இஷ்டத்தைப் பெறலாம். உன்னை அழைப்பவன் யாரென்று நினைத்து நீ காலந்தாழ்த்துகிறாய்? விரைந்து வாவென அழைப்பது நெடுமால் நீண்ட பெருமையும் வ்யாமோஹமும் உடைய விஷ்ணுவே என்று யசோதை சொல்வதாக எட்டாவது பாசுரத்தை அருளுகிறார். இதில் எத்துணை பெரியவனாக இருந்தாலும் எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்யவே பாத்யதையுள்ளவன் ஆதலால் அவனிடம் குற்றம் செய்தல் சின்னத்தனம் என்பதையும், அப்படியவன் இறங்கி வந்து சேவை செய்தால், அவன் தற்பொழுது செய்யும் தொழிலும் அவனக்கு நிற்கும் என்ற பொருளும் தேற பாசுரம் அமைத்து எம்பெருமானின் ஸ்வாமித்வம் ஜீவாத்மாக்களின் அடிமைத்வம் இரண்டையும் காட்டினார்.

அடுத்து இந்த பருவத்தில் அம்புலியை அழைக்கும் ஒன்பதாவது பாசுரத்தை, மேலே நாம், அம்புலிப்பருவத்தில் சொல்லும் விடயம் இன்னவாறு அமையும் என்று பார்த்த முதல் மூன்றை முடித்து நான்காவதான, வருந்தி அழைத்தும் வரவில்லையாயின் இன்ன தண்டனை பெறுவாய் என்று கூறுதலைக் கைக்கொள்கிறார்.

இவ்வளவு சொல்லியும் அம்புலி கண்ணனோடு விளையாட வராததனால் யசோதை கடுமையாகப் பேசுகிறாள். ஹே பூர்ணசந்திரனே! குடத்திலுள்ள வெண் ணெய் முழுவதையும் தன் விரிந்த கை களினால் எடுத்து விழுங்கியவனாகவும், அப்படி விழுங்கியும் வயிறு இருப்பதே தெரியாதவாறு பெட்டிபோன்று பெருமையுடைய வயிற்றினை உடையவனாகவும், எங்களுக்கு உபகாரகனாகவும் இருக்கின்ற இவன் உன்னைக் கூப்பிடுகிறான். இனியும் நீ வாராமலிருந்தால் திருச்சக்கரத்தை எடுத்து தாழியைப் போல் உடைப்பான். இதற்காக இவன் எழும்பிப் பாய்வதோ, த்ரிவிக்ரமாவதாரம் எடுப்பதோ வேண்டாம்; இருந்த இடத்திலிருந்தே மனதில் நினைத்தானாகில் போதும் அவன் மனமறிந்து அந்த சக்கரப்படை வேலைசெய்யும். வாழ்வதற்கு ஆசைப்பட்டால் மகிழ்ந்து ஓடிவா என்று அம்புலிக்கு எச்சரிக்கை செய்து அழைக்கிறாள்.

இத்தப் பத்துப்பாடல்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு சொல்ல ஸமர்த்தரானவர்களுக்கு துன்பம் வருவதில்லை என்று பலன் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

இந்த அம்புலிப்பருவத்திற்கு ஆழ்வாரிட்ட உள்ளுறைப்பொருளைச் சுருக்கமாகப் பார்ப்போம். விரிவை வல்லார்வாய் கேட்டுத் தெளிக!

முதல் பாசுரத்தில் தன் குழந்தையான கோவிந்தனைக் காண ஜீவனான சந்திரனை அழைப்பதாக நம்மை, நம் அனைவரையும் காப்பவனான பரமாத்வாவின்

எழில்காண அழைத்தார்; அடுத்து ஸத்வம் தலையெடுக்கும் (வெண்மை நிறங்கொள்ளும்) நம்மை, அஞ்சனவண்ணனான அளவில்லா விளையாட்டுடையானுடன் விளையாட அழைத்தார்; மூன்றாவதில் எத்துணை முயன்றாலும் ஜீவர்கள் பரமாத்மாவாகிவிடமுடியாது, அவனே வினைகடியும் வேங்கடவன் என்று நம்மை விரைந்து ஓடிவரச் சொன்னார்; நான்காவதில், எம்பெருமானையும் அவனின் ஸ்ருஷ்டியையும் ஆழ்வார்களைப் போல் ரஸிக்காதவர்கள் மலடர்கள் என்று காட்டிப் பின் அந்த கபடம் விடுத்து அவனையும் அவனின் விபூதியையும் ரஸிக்க வாருங்கள் என்றார்; ஐந்தாவதில், எம்பெருமானை தம் கரணகளேபரங்களால் அனுபவிக்காதவர்கள் ஊனர்கள் என்பதால் கிடைத்த இந்திரியங்கள் பயன்பெற அவனைக் காண வாரீர் என்றார்.

ஆறாம் பாசுரத்தில் அன்பர்களுக்கு ஆபரணமாகத் தோன்றும் அவன் ஆயுதங்கள் எதிரிகளை அழிப்பதற்குக் கொஞ்சமும் தயங்காது ஆதலால் ஸத்யஸங்கல்பனான அவன் உனக்காக விழித்திருக்கிறான்; உடனே வாவென்றார். ஏழாம் பாசுரத்தில் ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதும் இல்லா அன்று ஆலிலை துயின்ற மூலமூர்த்தியும் முகுந்தனுமானதால் அவனிடம் அபசாரப்படாமல் அவனுடைய ஸௌந்தர்யாதிகளிலே களித்து மகிழ்ந்து காலத்தைக் கடத்துங்கள் என்றார்; எட்டில் இவன் ஸர்வ ஸ்வதந்த்ரன் நீங்களோ கொஞ்சமும் ஸ்வதந்த்ரம் இல்லாதவர்கள்; கொஞ்சம் இதிஹாஸ புராணங்களைப் புரட்டினால் இவை புரியும் என்று அவனுக்கு அர்ஹனாகும் வழியைக் காட்டுகிறார்; ஒன்பதாம் பாசுரத்தில் இந்த ஸம்ஸாரபந்தத்தில் இருத்தும் ஊழ்வினை விட்டு உயர்ந்த வாழ்வினைப் பெறவும், அவனது சக்கரம் தண்டிக்காமல் இருக்கவும் உளமாரக் கருதினீர்களானால் மகிழ்ந்து ஓடிவாரீர் என்று நம் போன்ற அனைத்து ஜீவர்களையும் அழைத்துப் பலச்ருதியாக பத்தாவதில் இதனை அனுஸந்தித்தவர்க்குப் பிறவித் துயர் நீங்கும் என்று முடிக்கிறார்.

இந்த அம்புலிப் பருவத்தால் நாம் எப்படி எம்பெருமானுக்கு அடிமை செய்யவே இட்டுப் பிறந்திருந்தும் அவனுக்குக் கைங்கர்யம் செய்யாமல் தொலைவில் நின்றுகொண்டிருக்கிறோம் என்பதையும், கைங்கர்யம் செய்யாததால் என்ன வெல்லாம் இழக்கிறோம் என்பதையும் காட்டி நம்மை நம் ஸ்வரூபத்துக்கு அனுகூலமாய் இருக்க வழிசெய்கிறார் பெரியாழ்வார்.

பெரியாழ்வார் கண்ணனுக்குப் பாடிய பிள்ளைத் தமிழின் அடுத்த பருவத்தை வருமிதழில் காண்போம்.

*(தொடரும்...)*

## புரட்டாசியில் முக்கிய உத்ஸவங்கள்

**நவராத்ரி உத்ஸவம் (9 நாட்கள்)**
ஸெப்டம்பர் 26 (திங்கள்) முதல்
அக்டோபர் 4 (செவ்வாய்) வரை

**மஹாநவமி**
அக்டோபர் 4 (செவ்வாய்)

**விஜயதசமி**
அக்டோபர் 5 (புதன்)

**ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம் (10 நாட்கள்)**
ஸெப்டம்பர் 26 (திங்கள்) முதல்
அக்டோபர் 5 (புதன்) வரை

**ஸ்வாமி தேசிகன் திருநக்ஷத்ரம்**
அக்டோபர் 5 (புதன்)

**திருப்பவித்ர உத்ஸவம் (7 நாட்கள்)**
அக்டோபர் 9 (ஞாயிறு) முதல் 15 (சனி) வரை

## நவராத்ரி உத்ஸவம்

| நாள் | தேதி | உபயம் |
|---|---|---|
| 1 | 26-9-2022 | ஸ்ரீ V. சேஷாத்ரி |
| 2 | 27-9-2022 | ஸ்ரீ K.R. ஸ்ரீநிவாஸன் |
| 3 | 28-9-2022 | ஸ்ரீ D. ஸுந்தரவரதன் |
| 4 | 29-9-2022 | ஸ்ரீ N.R.S. ராமக்ருஷ்ணன் |
| 5 | 30-9-2022 | ஸ்ரீ M.K. ராமஸ்வாமி குடும்பத்தினர் |
| 6 | 1-10-2022 | ஸ்ரீ P.D.R. பண்ட் |
| 7 | 2-10-2022 | ஸ்ரீ K.S. ஸேதுராமன் குடும்பத்தினர் |
| 8 | 3-10-2022 | ஸ்ரீமதி அலமேலு ராமபத்ரன் |
| 9 | 4-10-2022 | ஸ்ரீ S. நாராயணன் – ஸ்ரீ T. நாராயணன் குடும்பத்தினர் |

ஸ்ரீ:



*With Pranams:*

**Sridhar Parthasarathy**
**& Family,**

Luz Church Road,
Mylapore, Chennai - 600 004.
Mobile No. 95666 73991.

**SVDD thanks Sri Sridhar Parthasarathy & Family**
for sponsoring this month's issue of Desika Sandesam




ஸ்ரீஜயந்தீ - உறியடி உத்ஸவம்





ஸ்ரீ:





## வேத ஸம்மேளனம்


















'ராமாநுஜ தயா பாத்ரம்' தனியன் அவதார உத்ஸவம்






ஸ்ரீ:




## ஸ்ரீ அலர்மேல்மங்கைத் தாயார் லக்ஷார்ச்சனை









ஸ்ரீ அலர்மேல்மங்கைத் தாயார் லக்ஷார்ச்சனை







## ஸ்ரீஸூக்த ஹோமம்









ஸ்ரீஸூக்த ஹோமம்









ஸ்ரீ:

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருமயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவ பத்திரிகை

கலயே ஸததம் கருணா ஜலதிம் கருணா விஷயம் கமலாதிபதே: ।
கலிவைரி ஶடாரி வசோ ரஸிகம் கவிதார்க்கிக கேஸரி ஸூரிகுரும் ॥

कलये सततं करूणा जलधिं करूणा विषयं कमलाधिपतेः
कलि वैरि शठारि वचो रसिकं कवितार्किक केसरि सूरि गुरूम्

**மாமயிலைப்பதியதனில் ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் ஸந்நிதியில் நாளது சுபக்ருத் வருஷம் புரட்டாசி மாதம் 9ம் தேதி 26.09.2022 திங்கட்கிழமை முதல் நடைபெறும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் வார்ஷிக மஹோத்ஸவத்திற்கு ஸகல ஆஸ்திகர்களும் எழுந்தருளி மேற்படி உத்ஸவத்தை சிறப்பித்து, ஆசார்ய ப்ரஸாதம் பெற்று ஆனந்தித்து அடியோங்களையும் தன்யராக்கும்படி ப்ரார்த்திக்கின்றோம். புரட்டாசி 18ம் தேதி 05.10.2022 புதன்கிழமை ஸ்ரீவேதாந்த தேசிகன் சாற்றுமுறை நடைபெறும்.**

R. ராகவன், R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன் - தர்மகர்த்தாக்கள்

| | | | |
|---|---|---|---|
| *28.09.2022* | புதன்கிழமை | காலை | தங்க கருட வாஹனம் |
| *04.10.2022* | செவ்வாய்கிழமை | காலை | திருத்தேர் |
| *05.10.2022* | புதன்கிழமை | இரவு | சாற்றுமுறை |

## உத்ஸவ விபரம்/ நிகழ்ச்சி நிரல்

| நாள் | உற்சவம் | நேரம் | உபயதாரர் |
|---|---|---|---|
| 25.09.22 (ஞாயிறு) | ஸ்வாமி தேசிகன் கண்ணாடியறைக்கு எழுந்தருளல் | இரவு 8:00 | ஸ்ரீ. C.R. ராகவன் குடும்பத்தினர் |
| 26.09.22 (திங்கள்) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ. T.C. ரங்கராஜன், 2. ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன் , 3. Prof. ஸ்ரீ. ரங்கராஜன் |
| | யாளி வாஹனம் | இரவு 8:00 | Electoral Board |
| 27.09.22 (செவ்வாய்) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ K. ராஜகோபால் |
| | சூர்யப்ரபை | இரவு 8:00 | 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ V. ராஜகோபால் |
| 28.09.22 (புதன்) | ஸ்ரீ பெருமாள் கருட வாகனம், ஸ்ரீ தேசிகன் தங்க கேடயம் | காலை 7:00 | 1. ஸ்ரீமதி பத்மா சாரங்கன் குடும்பத்தினர், 2. ஸ்ரீ P. ஸ்ரீநிவாஸராகவன் குடும்பத்தினர், 3. ஸ்ரீ R. பார்த்தஸாரதி |
| | ஸிம்ஹ வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ S.R.R. ஆசார்யா குடும்பத்தினர், 2. ஸ்ரீ T.P. பத்மநாபன் |
| 29.09.22 (வியாழன்) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ.R. வெங்கடேஷ், 2. ஸ்ரீமதி ஸ்ரீநிவாஸன் |
| | சந்திரப்ரபை | இரவு 8:00 | 1. ஸ்ரீ T.T. ரகுராம், 2. ஸ்ரீ R. குஞ்சிதபாதம் (ஜோஸ்யர்) |
| 30.09.22 (வெள்ளி) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ V.A. ரகு குடும்பத்தினர், 2. ஸ்ரீ S.T. ராகவன் குடும்பத்தினர் 3. ஸ்ரீமதி கனகம்மாள் பண்டு |
| | ஹம்ஸ வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி, 2. ஸ்ரீ A. நரஸிம்மன் |
| 01.10.22 (சனி) | சூர்ணாபிஷேகம், பல்லக்கு | காலை 6:30 காலை 7:00 | 1. ஸ்ரீ V.P. ப்ரேம் குமார் 2. ஸ்ரீமதி P.R. விஜயலக்ஷ்மி பண்டு |
| | குதிரை வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் 2. ஸ்ரீமதி ரமாமணி ராஜகோபாலன் |

| நாள் | உற்சவம் | நேரம் | உபயதாரர் |
|---|---|---|---|
| 02.10.22<br>(ஞாயிறு) | பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ V.R. ராஜகோபால், 2. ஸ்ரீ V. கண்ணன் |
| | ஸ்ரீ ஹயக்ரீவ ஆராதனம் | மாலை 4:00 | ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி பரகாலமடம், மைசூர் |
| | மேனா பல்லக்கு<br>***(அக்ஷராப்யாச திருக்கோலம்)*** | இரவு 8:00 | 1. ஸ்ரீ N. நாராயணன் ராம்ஜி,<br>2. ஸ்ரீ சஞ்ஜீவ் செல்லப்பா, 3. ஸ்ரீ C. சந்தோஷ் |
| 03.10.22<br>(திங்கள்) | மேனா பல்லக்கு | காலை 7:00 | 1. ஸ்ரீ மாடபூசி சுதர்ஸனம் ஐயங்கார் பண்டு<br>2. ஸ்ரீ S.S. ராகவன் |
| | யானை வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ G. வாசுதேவன், 2. ஸ்ரீ T.V. ராமாநுஜம் |
| 04.10.22<br>(செவ்வாய்) | திருத்தேர் | காலை 7:00 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கைங்கர்ய ஸபா |
| | தங்க கேடயம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ N.S. கண்ணன், 2. ஸ்ரீ C. கிருஷ்ணன் |
| 05.10.22<br>(புதன்) | *ஸ்ரீ தேசிகன் சாற்றுமுறை* | | |
| | மூலவர் திருமஞ்ஜனம் | | தேவஸ்தானம் |
| | மங்களாசாஸனம் | காலை 5:00 | 1. ஸ்ரீ S. வரததேசிகன் & ஸ்ரீ V. வெங்கடேஷ் |
| | ஸ்ரீ பெருமாள்,<br>ஸ்ரீ தேசிகன் புறப்பாடு | காலை 8:00 | வனபோஜனம் ட்ரஸ்ட் |
| | திருமஞ்ஜனம் | காலை 10:00 | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு) |
| | பத்தி உலாத்தல் | மாலை 6:00 | |
| | ஒய்யாளி,<br>திருப்பாவை சாற்றுமுறை,<br>மங்களகிரி புறப்பாடு,<br>திருவாய்மொழி<br>சாற்றுமுறை | இரவு | |
| 06.10.22<br>(வியாழன்) | கந்தப்பொடி<br>வஸந்தம் | காலை 7:00 | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு) |
| | விடையாற்றி உத்ஸவம்<br>முதல் நாள் – திருமஞ்ஜனம் | மாலை 4:30 | ஸ்ரீமதி சுபத்ரா பாலாஜி குடும்பத்தினர் |
| 07.10.22<br>(வெள்ளி) | விடையாற்றி உத்ஸவம்<br>இரண்டாம் நாள் – திருமஞ்ஜனம் | காலை 9:30 | ஸ்ரீ S. சுந்தரம் |
| 08.10.22<br>(சனி) | விடையாற்றி உத்ஸவம்<br>மூன்றாம் நாள் – திருமஞ்ஜனம் | காலை 9:30 | ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் (பண்டு)<br>ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர் |
| 31.10.22<br>(திங்கள்) | விடையாற்றி உத்ஸவம்<br>27ம் நாள் – திருமஞ்ஜனம் | காலை 9:30 | ஸ்ரீ T. ஸ்ரீனிவாசன் & ஸ்ரீ S. பரத்வாஜ் |
| | புஷ்ப பல்லக்கு | இரவு 7:30 | ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் (பண்டு)<br>ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர் |

(பிரதி தினம் காலை 9:00 மணிக்கு திருமஞ்ஜனம், மாலை 6:30 மணிக்கு பத்தி உலாத்தல்நடைபெறும்)

**Note:** 1. CONTRIBUTIONS, IF ANY, CAN BE MADE BY WAY OF CASH OR CHEQUE (in favour of **Sri Vedantha Desikar Devasthanam)**

2. Those who have not updated their contact details like mobile number, E-mail ID are requested to update the same, in order to ensure frequent and speedier communication.

ஸ்ரீ:

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருப்பவித்ரோத்ஸவ பத்திரிகை

## பசலி 1432 ~ சுபக்ருத் வருஷம் ~ 2022

## 09.10.2022 முதல் 15.10.2022 வரை

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் நாளது சுபக்ருத் வருஷம் புரட்டாசி மாதம் 22ம் தேதி (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை முதல் பவித்ரோத்ஸம் ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக் கொண்டிருக்கிறான்.

மேற்படி உத்ஸவத்தில் வேதபாராயணம், அத்யாபகம், க்ரந்த பாராயணம் ஆகிய கைங்கர்யங்களில் ஸ்வாமிகள் அன்வயித்து, மாமயிலை திவ்யதம்பதிகள், ஸ்ரீபேயாழ்வார் மற்றும் ஸ்வாமி தேசிகனின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

அங்குரார்ப்பணம் – 07.10.2022 – சனிக்கிழமை மாலை
அதிவாஸம் – 08.10.2022 – ஞாயிற்றுக்கிழமை மாலை
தினசரி ஹோமம் – காலை 8:30 மணி மற்றும் இரவு 8:15 மணி
மஹாபூர்ணாஹூதி – 15.10.2022 – சனிக்கிழமை
பிரதி தினம் மாலை 6.15 மணிக்கு பெருமாள், தேசிகன் புறப்பாடு

R. ராகவன், R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன்
*தர்மகர்த்தாக்கள்*

ஸ்ரீ:

| நாள் | காலை உத்ஸவ உபயம் | காலை ததீயாராதனை உபயம் | மாலை உத்ஸவ உபயம் | மாலை ததீயாராதனை உபயம் |
|---|---|---|---|---|
| 07.10.22 (வெள்ளி) | அங்குரார்ப்பணம் (மாலை)<br>ஸ்ரீ சேனைநாதன் புறப்பாடு | —— | ஸ்ரீ K.L.ராமதுரை | —— |
| 08.10.22 (சனி) | அதிவாஸம் (மாலை) | —— | ஸ்ரீ அத்திகிரி அருளாளன் | —— |
| 09.10.22 (ஞாயிறு) | ஸ்ரீ. R. முகுந்தன் | 1. ஒலக்கூர் ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன்<br>2. ஸ்ரீ S. ரவிச்சந்திரன் | ஸ்ரீ N.S. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ K. ராஜகோபாலன்<br>2. ஸ்ரீ N.சேஷாத்ரி |
| 10.10.22 (திங்கள்) | 1. ஸ்ரீமதி ஜானகியம்மாள் பண்டு<br>2. ஸ்ரீ S.பத்மநாபன் | ஸ்ரீ K.R. ராமஸ்வாமி<br>ஸ்ரீ R. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ P.V. ராகவன் (பண்டு)<br>2. ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ N.S. வரதாச்சாரி<br>2. ஸ்ரீ. நந்தகுமார் |
| 11.10.22 (செவ்வாய்) | ஸ்ரீமதி பத்மா ராமானுஜம் | ஸ்ரீ S.V.S. ராகவன்<br>ஸ்ரீ. R. ராமக்ருஷ்ணன் | ஸ்ரீ A.N.S. சுந்தரம் | 1. ஸ்ரீ A.N.S. சுந்தரம்<br>2. ஸ்ரீ L.V. நரஸிம்மன் |
| 12.10.22 (புதன்) | ஸ்ரீ T.V. நரஸிம்மன் | 1. ஸ்ரீ D. சுந்தரராஜன்,<br>2. ஸ்ரீமதி D.சுஜாதா | ஸ்ரீ Dr. E. ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ T.M. ரவி நரஸிம்மன்<br>2. ஸ்ரீ M.P. ராஜா |
| 13.10.22 (வியாழன் | ஸ்ரீ S. அருண் | ஸ்ரீ M.D. சுதர்ஸனம் ஐயங்கார் (பண்டு)<br>ஸ்ரீமதி ப்ரேமா பார்த்தஸாரதி | ஸ்ரீ N.K. ரங்கஸ்வாமி ஐயங்கார் குடும்பம் | 1. ஸ்ரீ R. சம்பத்,<br>2. ஒலக்கூர் ஸ்ரீ R. ராஜகோபாலன் |
| 14.10.22 (வெள்ளி) | ஸ்ரீ S. சத்யநாராயணன் &<br>ஸ்ரீ N.கேசவன் | ஸ்ரீ V.J. பார்த்தஸாரதி<br>ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா<br>ஸ்ரீமதி T.V. சாந்தா | 1. ஸ்ரீமதி கமலா & சுமைதாங்கி கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர்<br>2. ஸ்ரீமதி R. மஹாலட்சுமி | ஸ்ரீ T.M. ராஜகோபாலன்<br>ஸ்ரீ. R. முகுந்தன் |
| 15.10.22 (சனி) | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. கீழச்சேரி ஸ்ரீ S. ராகவன் | ஸ்ரீ P.R. கோபாலக்ருஷ்ணன் &<br>P.G. அமிர்தவல்லி குடும்பத்தினர் | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. ஸ்ரீ. வஸந்த் ஷான்பாக் பூர்ணாஹுதி திருமஞ்ஜனம் ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி | ஸ்ரீ சந்திர குமார் &<br>லீலா குமாரி குடும்பத்தினர் |

பட்டு பவித்ரங்கள் உபயம் : Dr. திலீப் க்ருஷ்ணா; ப்ரதி தினம் காலை, மாலை க்ஷீர கைங்கர்யம் உபயம் : ஸ்ரீமதி ஹேமலதா ரமாமணி

CONTRIBUTIONS IN KIND / CASH ARE WELCOME

கண்ணுக்கினியன



கோதா கோஷ்டியினர் தாங்களே தயார் செய்த
அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய விதானத்தை
தேவஸ்தானத்திற்கு ஸமர்ப்பித்தல்

ஸ்ரீ:

# பவித்ரனுக்கு பவித்ரோத்ஸவம்

ஸ்ரீமதி ரமா ராகவஸிம்ஹன்

*விண்மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்! கடல்சேர்ப்பாய்!*
*மண்மீதுழல்வாய்! இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்!*
*எண்மீதியன்ற புறவண்டத்தாய்! எனதாவி,*
*உள்மீதாடி உருக்காட்டாதே ஒளிப்பாயோ? [6-9-5]*

எம்பெருமானின் ஐந்து நிலைகளாகும் பரத்வம் (விண்மீதிருப்பாய்), வ்யூஹம் (கடல்சேர்ப்பாய்), விபவம் (மண்மீதுழல்வாய்), அர்ச்சை (மலைமேல் நிற்பாய்), அந்தர்யாமி (மறைந்துறைவாய்) ஆகியவற்றை விளக்கும் நம்மாழ்வாரின் திருவாய் மொழிப் பாசுரம் இது. எம்பெருமான் கொண்ட ஐந்து நிலைகளில், ஆச்ரிதர்கள் ப்ரபத்தி பண்ணிக்கொள்ள ஸௌலப்யமானது அர்ச்சையே.

**அர்ச்சையின் ஸௌலப்யம்**

*தமர் உகந்தது எவ்வுருவம்? அவ்வுருவந்தானே;*
*தமருகந்தது எப்பேர்? மற்றப்பேர் தமருகந்து*
*எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பரே?*
*அவ்வண்ணம் ஆழியானாம்.*

*[முதல் திருவந்தாதி - 44]*

தனது அடியார் உகந்த உருவத்தனாகி, அவருகந்து அழைக்கும் பேர் ஏற்று, அவரது சிந்தனைக்கேற்ப செயல்படுபவன் திருக்கோயில்களில் அர்ச்சா மூர்த்தியானவன் என்று முதல் திருவந்தாதியில் பொய்கையாழ்வார் அர்ச்சையின் ஸௌலப்யத்தை கொண்டாடுகிறார்.

**ஆழ்வார்கள் ப்ரபத்தி அர்ச்சையிடமே**

ஆச்ரிதர்கள் மட்டுமல்லாது ஆழ்வார்களும் ஆசார்யர்களும் ப்ரபத்தி செய்தது அர்ச்சாமூர்த்தி களிடமே. உதாஹரணமாக, பெருமாள் திருமொழியில் குலசேகராழ்வார், மலைநாட்டின் திருவிற்றுவக்கோடு அர்ச்சாமூர்த்தியிடம் சரணாகதி அடையும் பாசுரம் இது:

*நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்*
*தன்னையே தான்வேண்டும் செல்வம்போல் மாயத்தால்*
*மின்னையே சேர்திகிரி விற்றுவக்கோட்டம்மா!*
*நின்னையே தான்வேண்டி நிற்பன் அடியேனே.*

*[பெருமாள் திருமொழி 5-9]*

**அர்ச்சையைக் கொண்டாடும் உத்ஸவங்கள்**

அர்ச்சையில் எம்பெருமானை ஆச்ரிதர்கள் கொண்டாடும் பல வகைகளில் வருஷாந்தர உத்ஸவங் களும் அடங்கும். இத்தகைய உத்ஸவங்களில் கர்மபத்தர்களான சேதனர்களை அந்வயிக்கச் செய்து, அவர்களது கர்மாக்களைக் கழித்து, அவர்களை கரை சேர்க்கிறான் ஆழிப்பிரான்.

ப்ரஹ்மோத்ஸவம், தெப்போத்ஸவம், பல்லவ உத்ஸவம், வஸந்தோத்ஸவம், கோடை உத்ஸவம், ஸ்ரீராமநவமி, பவித்ரோத்ஸவம், ஜ்யேஷ்டாபிஷேகம், ஜ்யேஷ்ட மாஸ (ஆனி) கருடோத்ஸவம், (ஆடி) பௌர்ணமி கருடோத்ஸவம், ந்ருஸிம்ஹ ஜயந்தி, ஸ்ரீ ஜயந்தி, நவராத்ரி, விஜயதசமி, தீபாவளி, கார்த்திகை, தநுர்மாஸம், அத்யயந உத்ஸவம், மாசி மகம், பங்குனி உத்தரம், ஆழ்வார்கள், ஆசார்யர்கள் திருநக்ஷத்ரங்கள் என்று ஆச்ரிதர்கள் அந்வயிக்கும் உத்ஸவங்கள் பலப்பல. ஒவ்வொரு உத்ஸவத் திற்கும் ஒவ்வொரு காரணம் உண்டு. எம்பெருமான் குறையொன்றுமில்லாத பவித்ரன் என்பதே அனைத்து ஸ்ரீவைஷ்ணவக் கோயில்களிலும் வருஷாவருஷம் பவித்ரோத்ஸவம் நடத்தப்படுவதற்கான அடிப்படைக் காரணம்.

**உத்ஸவங்களில் முக்யமானது பவித்ரோத்ஸவம்**

கோயில் ஸந்நிதிகளில் அர்ச்சாமூர்த்தியாக எழுந்தருளி யுள்ள எம்பெருமான் ஸாந்நித்யம் நிறைந்தவன் என்பதற்கு வேதமே ப்ரமாணம். உத்ஸவங்களில் பவித்ரோத்ஸவம் அதிக முக்யத்துவம் பெறுவது எம்பெருமானின் இந்த ஸாந்நித்யத்தினால் தான். பவித்ரனாகும் எம்பெருமானுக்கு செய்யப்படும் கிரிசைகள் அனைத்துமே பவித்ரமாக இருக்க வேண்டியது அவச்யம். எனவே நித்தம் அவனுக்கு செய்யப்படும் அனைத்து கைங்கர்யங்களும் ஆகம விதிமுறைகளின்படியே மேற்கொள்ளப்படுகின்றன.

ஆகமம் = **ஆ** + கமம். ஆ எனும் சொல் ஜீவனைக் குறிக்க, **கமம்** எனும் சொல் எம்பெருமான் ஜீவன்கள் கடைத்தேறுவதற்கென தன் நிலையினை விடுத்துக் கீழிறங்கி வந்து அனுக்ரஹிப்பதைக் குறிக்கின்றது. மிகமுக்யமாக, பாஞ்சராத்ர ஆகம விதிமுறைகள் எம்பெருமானால் உண்டாக்கப்பட்டவை. பாஞ்ச ராத்ர சாஸ்த்ரமானது வேதத்தினைப் போன்றே அபௌருஷேயமானது.

**பவித்ரோத்ஸவம் ஏற்றருளும் பவித்ரன்**

பாஞ்சராத்ர ஆகம விதிகளின்படி எம்பெருமானுக்கு செய்யப்படும் நித்ய, நைமித்திக, காம்ய கர்மாக் களில் ஏதாகிலும் குறை ஏற்படுமாயின் அவற்றை நிவ்ருத்தி செய்ய பரம வைதிகமான பவித்ரோத் ஸவம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஒற்றைப்படை எண்ணிக்கையிலான நாட்களில் (3/5/7) நடத்தப்படும் பவித்ரோத்ஸவத்தில், ஹோம குண்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு, அங்குரார்பணம் ஆரம்பித்து, ஸேனைநாதன் புறப்பாடு,



அதிவாஸம், பெருமாள் திருமஞ்ஜனம், சதுஸ்தான அர்ச்சனம், வேத, திவ்யப்ரபந்த பாராயணம், பவித்ரம் ஸமர்பித்தல், பெருமாள் வீதிபுறப்பாடு, ஹோமம், மஹாபூர்ணாஹுதி, கும்ப ப்ரோக்ஷணம், சாற்றுமுறை என்று பற்பல விசேஷமான ப்ரகரணங்கள் நடந்தேறும். அக்னிபூர்வமாக நடைபெறும் அனைத்து வைதிக ப்ரகரணங்களையும் எம்பெருமான் எழுந்தருளியிருந்து அனுக்ரஹிப்பான்.

பவித்ரோத்ஸவம் ஏற்றருளும் எம்பெருமான் பவித்ரமானவன் என்று கொண்டாடும் வேத வாக்யங்கள் மற்றும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள் சிலவற்றின் மூலம் பவித்ரனின் பூர்ணத்வத்தைக் கொண்டாடுவோம்.

**பவித்ரனைக் கொண்டாடும் வேதங்கள்**

வேதத்தின் அங்கமாகும் உபநிஷதங்கள் அந்த க்ஷீராப்திநாதன் குறையேதும் இல்லாதவன் என்று பல இடங்களில் கூறுகின்றன.

எவருடைய அழகிய தாமரை இதழ் ஒத்த திரு வடியினை வணங்குவதனால் அடியேனுடைய தோஷங்கள் அனைத்தும் நீங்குகின்றனவோ அந்தப் பவித்ரமானவனை நான் வணங்குகிறேன். இது **கீதா பாஷ்ய மங்களம்** கூறுவது.

ஸ்ரீமந்நாராயணன் பூர்ணமானவன் என்று **கடவல்லி உபநிஷத்** மற்றும் **ஈசாவாஸ்ய உபநிஷத** வாக்கியங்கள் நிஷ்கரிக்கின்றன.

**பவித்ரனைக் கொண்டாடும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள்**

பரிபூர்ணனான எம்பிரான் உத்தமன், பவித்ரன், ஸௌலப்யன் (சரணடைவதற்கு ஸுலபமானவன்) என்று ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள் பல அவனைத் தொழுதேத்துகின்றன.

**அமலன், நிமலன், விமலன்**

ஆழ்வார்கள் தமது அருளிச் செயல்களில் எம்பெரு மானின் பவித்ரத்தினை விளக்குவதற்கு அமலன், விமலன், நிமலன், நின்மலன், உத்தமன் போன்ற பதங்களைப் ப்ரயோகித்திருக்கின்றனர். இவற்றின் அர்த்தமாவது, எம்பெருமான் நிர்மலமானவன், குற்ற மற்றவன், தூயவன், பரிசுத்தமானவன் என்பதாகும்.

*அமலன் ஆதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்*
*விண்ணவர் கோன் விரையார் பொழில் வேங்கடவன்*
*நிமலன் நின்மலன் நீதி வானவன் நீள்மதில் அரங்கத்து அம்மான்*
*திருக்கமல பாதம் வந்து என்கண்ணினுள்ளன ஒக்கின்றதே.*

என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே! என்று அரங்கத்தம்மானைக் கொண்டாடும் திருப்பாணாழ்வார், தனது ப்ரபந்தத்தின் முதல் பாசுரத்திலேயே அமலன் விமலன் நிமலன் நின்மலன் என்று பிராட்டி மணாளனின் பவித்ரத்தினைப் பறைசாற்றுகிறார். மேலும் எட்டாம் பாசுரத்தில்:

*பரியனாகி வந்த அவுணன் உடல்கீண்ட அமரர்க்கு*
*அரிய ஆதிபிரான் அரங்கத்து அமலன் முகத்து*
*கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரிஓடி நீண்டவப்*
*பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே!*

எம்பெருமானது திருமுகத்தே உள்ள, தீர்க்கமான பார்வையினைக் கொண்ட நீண்ட பெரிய நேத்ரங்கள் தன்னைப் பேதமை கொள்ளச் செய்வதாக ஆழ்வார் சொல்லும் இந்தப் பாசுரத்தில், அமலன் என்று கூறி அவன் பரம பாவனமானவன் என்கிறார்.

**என்னென்பேன் எனும் நம்மாழ்வார்**

*அச்சுதன் அமலன் என்கோ! அடியவர் வினை கெடுக்கும்*
*நச்சுமா மருந்தம் என்கோ! நலங்கடல் அமுதம் என்கோ!*
*அச்சுவைக் கட்டி என்கோ! அறுசுவை அடிசில் என்கோ!*
*நெய்ச்சுவைத் தேறல் என்கோ! கனி என்கோ! பால் என்கேனோ!*

*[திருவாய்மொழி 3-4-5]*

''என் அச்சுதன் பவித்ரமானவன் என்பேனா? தன்னடி பணிந்தோர் வினை தீர்க்கும் அருமருந்து என்பேனோ? தன்னை ஒருகால் சரணமடைந்தார்க்கும் அபயமளிக்கும் அமிர்தம் என்பேனோ? உண்ணப்

பருகத் தெவிட்டாத தித்திக்கும் அடிசிலோ? கனியோ? பாலோ? என்னென்பேன்!'' என்கிறார்.

சரணாகதி என்று உன் திருவடியினைப் பற்றினோரது கர்மவினைகளைக் களைந்து அவர் தமக்கு அபயப்ரதானம் அனுக்ரஹிக்கும் உந்தன் காருண்யத்தினை அடியேன் அமுதமென்பதா, கரும்பென்பதா, தேனென்பதா, நெய்யென்பதா, கனியென்பதா, பாலென்பதா? என்னென்று சொல்வேன் என்று இங்கு நம் ஆழ்வார் உருகும் அந்த பாவமானது, ஆச்ரிதர்களுக்குத் தத்தம் அபிமான அர்ச்சாமூர்த்திகளிடம் உண்டாகும் மெய்சிலிர்க்கும் அனுபவம்.

**கலியன் கொண்டாடும் அமலன்**

*துன்னி மண்ணும் விண் நாடும் தோன்றாது இருளாய் மூடிய நாள்*
*அன்னம் ஆகி அரு மறைகள் அருளிச்செய்த அமலன் இடம்*
*மின்னு சோதி நவமணியும் வேயின் முத்தும் சாமரையும்*
*பொன்னும் பொன்னி கொணர்ந்து அலைக்கும் புள்ளம்பூதங்குடி தானே.*

*[பெரிய திருமொழி 5-1-9]*

மண்ணுலகமா விண்ணுலகமா என்றறிந்து கொள்ள முடியாதபடி எங்கும் அந்தகாரம் சூழ்ந்த காலத்தே ஹம்ஸரூபியாக அவதரித்து வேதங்களை மீட்டவன் புள்ளம்பூதங்குடியில் அர்ச்சாமூர்த்தியாகும் ராமன் எனும் பவித்ரன் (அமலன்) என்கிறார் திருமங்கை ஆழ்வார்.

*ஊரான் குடந்தை உத்தமன் ஒரு கால் இரு கால் சிலை வளையத்*
*தேரா அரக்கர் தேர் வெள்ளம் செற்றான் வற்றா வருபுனல் சூழ் பேரான்*
*பேர் ஆயிரம் உடையான் பிறங்கு சிறை வண்டு அறைகின்ற தாரான்*
*தாரா வயல் சூழ்ந்த சாளக்கிராமம் அடை நெஞ்சே!*

*[பெரிய திருமொழி 1-5-4]*

மற்றொரு பாசுரத்தில், திருஊரகம் மற்றும் திருக்குடந்தையில் அர்ச்சாமூர்த்தியாக எழுந்தருளி இருக்கும் எம்பெருமான்களை ஸேவித்து அவர்களை முன்னிட்டு அவர்தம் பவித்ரத்வத்திற்கு கட்டியம் கூறுகிறார் கலியன்.

**பாவை பாடும் உத்தமன்**

*ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர் பாடி*
*நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்...*

திருப்பாவை மூன்றாம் பாசுரத்தில் கோதை நாச்சியார், தூயவனாகும் தனது தலைவனின் பேர் பாடினால் இன்னின்னது ப்ராப்தம் ஆகும் என்று விவரிக்கிறாள். பாவை நோன்பிருந்தவள் இங்கு உத்தமன் என்று கொண்டாடுவது அர்ச்சாமூர்த்தியாம் அரங்கனென்னும் அமுதினை.

**உத்தமனைக் காண்பாய் நல்நெஞ்சே!**

*உளன்கண்டாய் நல்நெஞ்சே! உத்தமன் என்றும்*
*உளன்கண்டாய் உள்ளுவார் உள்ளத்து உளன்கண்டாய்...*

மேற்கண்ட பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதி (99), பேயாழ்வாரின் மூன்றாம் திருவந்தாதி (40) மற்றும் திருமழிசையாழ்வாரின் நான்முகன் திருவந்தாதி (86) பாசுரங்கள் எம்பெருமானை (அர்ச்சா திருமேனி) உத்தமன் என்று அழுந்தக் கூறுகின்றன.

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் எம்பெருமானின் குழாம் புகுந்து, காலும் எழா கண்ணா நீரும் நில்லா உடல்சோர்ந்து நடுங்கி குரல்மேலும் எழா மயிர்க்கூச்சும் அறா தோள்களும் வீழ்வு ஒழியா வண்ணம், பவித்ரனை அடிபணிந்து, பவித்ரோத்ஸவத்தில் பங்கு கொண்டு, ஆச்ரிதர்களாகிய நாம், நமது ச்ரத்தா ஹீனத்தினால் உண்டான தோஷங்களிலிருந்து விடுபடுவோம்! ✻


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004. போன்:
044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

# பாதுகையைப் போற்றும் பாதுகாஸேவகர்

ஸ்ரீமதி வஸுமதி S. ராஜன், பெங்களூரு

**முன்னுரை**

எம்பெருமானாகிய திருவேங்கடவனின் அவதாரமென்றும், அவருடைய கண்டாமணியின் அவதாரமென்றும், ஆசார்யரான ஸ்ரீபாஷ்யகாரரின் அவதாரமென்றும் போற்றப்படும் நம் தூப்புல் குல வள்ளலான, ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த உயரிய க்ரந்தம், ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரமாகும். இது 32 பத்ததிகளாக, 1008 ச்லோகங்களைக் கொண்ட ஒரு ஸ்தோத்ர க்ரந்தம்.

**க்ரந்தத்தின் அவதாரிகை**

ஸ்வாமி தேசிகன் யாத்ரையாக, ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்து, பெரிய பெருமாளையும், பிராட்டியையும் ஸேவித்து, வழக்கம்போல, ஸித்தாந்த ப்ரவசனங்களைச் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார். அப்போது, ஒரு கவி, ஸ்ரீ தேசிகனைப் பார்த்து, ''உம்மால் 1000 ச்லோகங்கள் இயற்ற முடியுமா? நான் பதகமல ஸஹஸ்ரம் என்று 1000 ச்லோகங்கள் எழுதுகிறேன்; உம்மால் எழுதிக்காட்ட முடியுமா?' என்று போட்டியிட்டார்.

ஸ்வாமியின் விசேஷ ஜ்ஞானத்தையும், மேதா விலாஸத்தையும், பெரிய பெருமாள் பிராட்டியின் திருவடிகளில் அவருக்குள்ள, ஈடுபாட்டையும் கண்ட அருகில் இருந்த பல அறிஞர்கள், ஸ்வாமியின் வாயிலாக, அரங்கனுக்கு ஒரு ஸ்தோத்ர ரூபமான உத்தம காவியம் அவதரிக்க வேண்டும் என்று விஜ்ஞாபனம் செய்தனர்.



ஸ்ரீ தேசிகனும் தன்னிடம் போட்டியிட்டவரின் எண்ணத்தை மனதில் கொண்டு, அதையே பகவந்நியமனமாக ஏற்று, சேஷத்வத்தின் எல்லை நிலையில் நின்று பெரியபெருமாளின் திருவடி நிலைகளைக் காத்து நிற்கும் இரண்டு பாதுகைகளின் விஷயமாக ஓரிரவின் ஒரே யாமத்தில் ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் என்ற 1008 ச்லோகங்கள் கொண்ட அதி அற்புதமான இந்த க்ரந்தத்தை ஸாதித்தருளினார் (போட்டியிட்டவரால் 300 ச்லோகங்களே இயற்ற முடிந்தது).

ஸ்ரீ நம்மாழ்வாரிடம் பேரன்பும், பக்தியும் கொணட ஸ்ரீ தேசிகன் ''ஆழ்வாரும் பாதுகையும் ஒன்றே என்றும், ஆழ்வாரின் திருவாக்கினின்று அவதரித்த திருவாய் மொழிப் பாசுரங்கள் போல, தன் வாக்கினின்று இந்த ஸஹஸ்ரமும் உதித்ததற்குக் காரணம் பாதுகையின் ஒலியே என்றும் பாதுகாதேவியின் அருளாலேயே தன்னால் இதை இயற்ற முடிந்தது'' என்றும் அருளுகிறார்.

1000 ச்லோகங்களையும், பல்வேறு விருத்தங்களாலும், ஆழவார்களின் அருளிச்செயல்கள் மற்றும் ஆசார்யர்களின் விரிவுரைகளின் விளக்கங்களாகவும், சித்திர ரூபமான ச்லோகங்களாகவும், அமைத்துள்ளதைப் பார்க்கும் போது ஸ்ரீதேசிகனின் எண்ண ஓட்டத்தையும் கவித்துவத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாக அறிய முடிகிறது.

நம்மாழ்வாரை நினைக்கும்போதெல்லாம் எம்பெருமானின் திருவடி நிலையான சடாரி நினைவுக்கு வருவது போல, எம்பெருமானை ஸேவிக்கும் ஸமயம், நம் சிரஸில் சடாரி வைக்கப்பெறும் போது, ஸ்வாமி நம்மாழ்வாரையே ஸேவிப்பது போல எண்ணம் வருவது இயல்பு.

**ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தின் ப்ரபாவம்**

பாதுகை என்பதற்கு ஸ்ரீ வைகுண்ட நாதனின் பாதுகை, ஸ்ரீ பரதாழ்வான் பெற்ற ஸ்ரீ ராமனின் பாதுகை, ஸ்ரீ ரங்க

நாதனின் பாதுகை மற்றும் ஸ்ரீ நம்மாழ்வார் ஆகிய நான்கு விதமாகப் பொருள் கொள்ளப்படுகிறது!

வேதங்களினால் நிதிபோலக் காக்கப்படும், எம்பெருமானின் திருவடிகளை ரக்ஷிக்கும் பாதுகையின் ப்ரபாவம் அபாரம். இது பக்தி இலக்கியங்களில் உன்னதமானது. பகவத் ஸங்கல்பத்தால் அவதரித்த இந்த க்ரந்தமானது, ஸ்ரீமத் ராமாயணத்தைப் போல, சரணாகதி தத்வத்தின் எல்லைநிலமாக உள்ளது. ஸ்ரீ பாதுகை ஸதாசார்ய ரூபமேயாகும்.

1000 ச்லோகங்களிலும் அடிப்படைப் பொருள் நம்மாழவார் பரமானது என்றாலும், நம் கவிஸார்வபௌமர் தமிழ் மறைகளை ஈரச்சொல்லால். உலகிற் களித்த ஆழ்வார்கள் பற்றிய புகழையும் ஆசார்யர்கள் புகழையும் ஆங்காங்கே பரக்கப் பேசுகிறார். அவர்களின் கருத்தை பல ச்லோகங்களில் உட்பொருளாகவும் வைத்திருப்பதிலிருந்து ஸ்ரீ தேசிகன் ஆழ்வார், ஆசார்யர்களிடம் கொண்டிருந்த பக்தியும் பேரன்பும் புலப்படுகிறது.

அவற்றில் ஒன்றிரண்டு பார்ப்போம்.

**ஸ்ரீ ஆண்டாள்**

ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தில் 14ம் பத்ததியான நாத பத்ததியில் அநாதி மாய... பாதுகே த்வாம் என்ற 27ம் ச்லோகத்தில் (407), 'பாதுகையிலிருந்து எழும் நாதமானது அஜ்ஞானமாகிய இருள் மண்டிக்கிடக்கும் ஸம்ஸாரம் என்னும் துன்பத்திலிருந்து, சேதனர்களை மீட்க உதவும் காலை நேரத்து மோக்ஷத்தை அறிவிக்கும் ஸுப்ரபாதம் போல உள்ளது'' என்று கூறுகிறார் ஸ்ரீ தேசிகன்.

இக்கருத்தையே ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாரும், தான் அருளிய திருப்பாவை என்னும் உயரிய ப்ரபந்தத்தில் 6ம் பாசுரத்தில் அறிய வைப்பது நினைவில் வரும்.

''விடியற்காலையில் பறவைகள் எழுப்பும் ஓசையானது, ஸம்ஸாரத்தில் உழன்று கிடக்கும் ஜீவர்களை எழுப்பி, பகவான் கண்ணனின் திருவடிகளை அடைந்து, கைங்கர்யம் செய்ய வாருங்கோள்'' என்று அழைப்பது போல, காலை வேளையில் மங்களகரமான நாதம் போல் கூவுகிறது என்கிறாள்.

இங்கு, ஆழ்வார் பாதுகையின் ஒலி மூலம் கூறும் அறிவுரையானது, பறவைகளை ஆசார்ய ரூபத்தில் வைத்துக் கூறுவதாக ஸ்ரீ ஆண்டாள் பாசுரம் அமைத்திருப்பதை, ஸ்ரீ தேசிகன் எடுத்துக் காட்டுகிறார்.

அடுத்து, 31ம் பத்ததியான நிர்வேத பத்ததியில் 19 வதான காலே ஜந்தூந்... ஸேவக இதி (969) என்ற ச்லோகத்தில், தன்னைப்பற்றிக் கூறுமுகமாக, ''எனது புலன்கள் ஒடுங்கி நிற்கும் என் தேஹாவஸான காலத்தில், 'உடனடியாக வா' என்று யமபடர்களின் பயங்கரமான மிரட்டும் ஓசையை நான் கேட்காமல் இருக்க வேண்டும்; பெரிய பிராட்டியுடன் கூடிய ஸ்ரீ ரங்கநாதனின் திருவடிகளுக்கு கைங்கர்யம் செய்பவர்களால், ''ஸ்ரீ ரங்கநாதனின் பாதுகா ஸேவகரை அழைத்து வா'' என்ற அருளப்பாட்டை வெகு விரைவாக நான் கேட்க வேண்டும்'' என்று தன் உள்ளக்கிடக்கையை ஸ்ரீ தேசிகன் தெரியப்படுத்துகிறார்.

**திருமழிசையாழ்வார்**

இக்கருத்தையே திருமழிசை ஆழ்வாரும். தான் அருளிய நான் முகன் திருவந்தாதியில் திறம்பேன்மின் கண்டீர்... கூவிச் செவிக்கு (68) என்ற பாசுரத்தில் தெரிவிக்கிறார்.

''ப்ரபன்னர்கள் தங்கள் அந்திமகாலத்தில் ஸர்வர்க்கும் ஸ்வாமியான ஸ்ரீமந் நாராயணனின் திருநாமத்தைச் சொல்ல மறந்தாலும், அவர்கள் மறந்தும் புறந்தொழா மாந்தராய் இருப்பின், அவர்களைப் பணிந்து, ப்ரணாமங்களைச் செய்து, ஸாதுக்களாக நடந்து கொள்ளுங்கள்'' என்று, யமதர்மராஜன், தன் ஸேவகர்களுக்கு, ரஹஸ்யமாக உபதேசித்தானாம்!

இப்படி ஸ்ரீ தேசிகன் தான் இயற்றிய ச்லோகங்களில் பல உட்கருத்தையும் சேர்த்தே கூறியிருப்பது அவரது மேதா விலாஸத்தை அறிவிக்கிறது.

**ஆசார்யர்கள்**

ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரத்தில், முதல் பத்ததியான ப்ரஸ்தாவ பத்ததி 2ம் ச்லோகத்தில், பரதாய பரம்... பாதுகா ப்ரபாவ: என்று ஸ்ரீ பரதாழ்வானை ஸ்ரீ தேசிகன் ஸேவிக்கிறார்.

இராமனைக் காண கானகம் சென்ற பரதன், இராமனை அயோத்திக்குத் திரும்பி வருமாறு எவ்வளவோ இறைஞ்சியும் இராமன் சம்மதிக்காததால், கடைசியில், தன் பொருட்டு, தன் திருவடி நிலைகளான பாதுகைகளை பரதனுக்கு ஈந்தான் இராமன். பெருமை மிக்க அப்பாதுகைகளுக்கு பட்டாபிஷேகம் செய்து, பாதுகைகளின் துணையோடு, எந்தவித குறைவும் இல்லாமல் 14 ஆண்டுகள் அயோத்தியில் பாதுகைகள் ஆள்வதுபோலவே நாட்டை ஆண்டான் பரதன்.

பாதுகைகளுக்கு இத்தனை ப்ரபாவம் உண்டென்று பரதன் மூலம் உலகோர் அறியமுடிந்தது.

'ப ர த' என்ற சொல் ஸ்ரீ நாதமுனிகளையும் குறிக்கும். தமிழ் மறையான நாலாயிர திவ்யப்ரபந்தத்தை பாவம் ராகம், தாளம் சேர்த்து இன்னிசையாக உலகிற்கு அளித்த வள்ளல் ஸ்ரீ நாதமுனிகள். ஆழ்வார்களின் ஸ்ரீ ஸூக்திகள் ஸ்ரீ நாதமுனிகளால்

வெளிப்பட்டன! இதன் மூலம் நம்மாழ்வாரின் பெருமையையும் உலகோர் அறிய முடிந்தது,

**ஆளவந்தார்**

ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் 32வதான பல பத்ததியில் 13ம் ச்லோகத்தில் ((983), ஜ்ஞானக்ரியா பஜன... விதி நைவ பங்கோ: என்று தன்னைக்குறித்து ஸ்ரீ தேசிகன் அவையடக்கமாக சொல்கிறார்.

''நான் கர்ம, ஞான, பக்தி யோகம் போன்றவற்றைப் பற்றி சிறிதும் அறியாத அகிஞ்சனனாய் உள்ளேன். அவற்றில் நிஷ்டை இல்லாததோடு, அவற்றைப் பெறுவதற்கான ஆத்ம குணங்களும் என்னிடம் இல்லை. எம்பெருமானின் க்ருபையால். பெருமானின் திருவடி நிலைகளான சடாரி (நம்மாழ்வார்) என் சிரஸில் சேர்ந்து என்னையும் ஒரு பொருளாக ஆக்கியது. இது எப்படி உள்ளது என்றால், நடக்க முடியாத ஒருவன் தலையில், கங்கையின் நீர் தானே விழுந்து அவனைப் புனிதமாக்கியது போல, பெருமானை அடைய வேண்டிய உபாயங்களை அறியாத அகிஞ்சனனான எனக்கு, பெருமாளே போக்யனானான்'' என்று மோஹிக்கிறார் ஸ்ரீ தேசிகன்.

இந்த ச்லோகத்தைப் படிக்குங்கால், ஸ்ரீ ஆளவந்தார் அருளிய, ஸ்தோத்ர ரத்னம் என்னும் க்ரந்தத்தில் 22ம் ச்லோகத்தில் ,தன்னையும் இவ்வாறு குறிப்பிடுவது நம் நினைவிற்கு வருகிறது!

ந தர்மநிஷ்டோஸ்மி... சரணம் ப்ரபத்யே! 'கர்மயோகம் செய்யவல்லேனல்லேன்; ஞானயோகம் செய்ய வல்லேனல்லேன்; உன் திருவடித் தாமரையில் பக்தியோகமும் செய்யவல்லவனாக இல்லை. ஒர் உபாயமும் அற்ற அகிஞ்சனனாய், வேறுபலனில் நோக்கற்ற அநந்யகதித்வனாய், உன் திருவடிகளையே உபாயமாகக் கொண்டு சரணடைகிறேன்'' என்று ஸ்ரீ ஆளவந்தார் இந்த ச்லோகம் மூலம் கூறுகிறார்.

இக்கருத்தையே ஆழ்வாரும் நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன் (திருவாய்மொழி 571)' என்று முதல் இரண்டையும் விடுத்து, தன் ஸ்வரூபத்தோடு சேர்த்து பகவத் ப்ராப்தி வேண்டியிருப்பதால் ப்ரபத்தியை அனுஷ்டித்தார்,

இப்படி ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ர ச்லோகங்கள் மூலம், ஆழ்வார், ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளையும் சேர்த்தே பொருள் கொள்ளுமாறு ஸ்ரீ தேசிகன் அமைத்திருப்பதற்கு அவர்களிடம் தூப்புல் வள்ளல் கொண்ட பக்தியும் பேரன்புமே காரணம்.

ஸ்ரீ தேசிகனின் மனதுக்குகந்த 32ம் பத்ததியில் 27ம் ச்லோகத்தில் (997), ''அநாதி காலமாக பற்பல யோனிகள் தோறும் பிறப்பதும் இறப்பதுமான இந்த ஸம்ஸாரச் சுழலில் சுற்றிக் கழிந்த காலத்திற்கு அளவே இல்லை. அத்துணைக்காலத்திலும், ஆத்மா வேறு, சரீரம் வேறு என்று அறியாமல், ஸ்வதந்த்ரனாய் எல்லாம் என்னால் ஆனது என்று நினைத்திருந்தேன். இத்துக்கத்தைப் போக்க, பகவான் தன் பரம கருணையால் ஒரு ஸதாசார்ய ஸம்பந்தம் ஏற்படுத்தி, அவர் மூலம் வேதாந்த ஜ்ஞானத்தைக் கற்பித்து, பகவானை ஆச்ரயிக்கும் சேஷபூதனாய் இருக்கும் நிலையை எனக்கு அளித்தான். பகவத் சேஷத்வத்தின் எல்லை நிலமான பாகவத சேஷத்வத்தைப் பெற்று, பகவானுக்கே ஆட்பட்டேன். இப்படி சிறந்த நற்கதி அடைந்த இந்தப் பிறவியே எனக்கு உகந்தது. இனி எனக்கு ஒரு குறையுமில்லை'' என்கிறார்.

இக்கருத்து, ஆழ்வார் அருளிய யானே என்னை அறியகிலாதே (299) என்ற திருவாய்மொழி பாசுரத்தின் கருத்தை ஒத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

ஸ்வாமி தேசிகன் 'உபய வேதாந்தாசார்யர்', 'கவிதார்கிக ஸிம்ஹம்', ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்' போன்ற பல விருதுகள் பெற்றிருந்தாலும், தன்னை ஸ்ரீ ரங்கநாத பாதுகா ஸேவகன் என்று அழைப்பதையே விரும்புவதாக, பல பத்ததி 7-ம் ச்லோகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

காரிமாறனின் மற்றொரு திருநாமம் சடகோபன் என்பதாகும். அனந்தாழ்வானுக்கு ஆதிசேஷன் என்று மற்றொரு திருநாமம் உண்டு. மறை உருவாக இருப்பவன் ஸ்ரீ கருட பகவான். இம்மூவரும் சேர்ந்த உருவான ஸ்ரீ பாதுகாதேவியின் இன்னருளால், ஆழ்வார், எம்பெருமானார், ஸ்ரீ தேசிகன் போன்றவர்களின் மெய் வாசகங்களை பாதுகா ஸஹஸ்ரத்தின் மூலம் நாம் எப்போதும் கேட்டுக்கொண்டே இருக்கலாம்.

ஆசார்யோத்தமரான ஸ்ரீ தேசிகன் பரம க்ருபையால் அருளிச் செய்த இந்த ஸ்தோத்ர க்ரந்தத்தை அனுதினமும் பாராயணம் செய்து வந்தால் நமக்கு ஸகல நன்மைகளும் உண்டாகும் என்பது திண்ணம். ஜ்ஞானம், அனுஷ்டானம், வைராக்யம் என்ற மூன்று தன்மைகளிலும் நிகரற்ற நம் ஸ்வாமி தேசிகனை 'ஒத்தாரும் மிக்காரும் இலையாய மாமாயா' என்று பரமபதநாதனைக் குறிக்கும் இவ்வாசகத்தால் அழைப்பது பொருத்தமாக இருக்கும்.

மனவிருள் மாற்றி எழில் ஞான விளக்கேற்றின ஆசார்ய வள்ளல், ஸ்ரீதேசிகனைப் போற்றி உகப்பதும், புந்தியில் கொள்வதும் ஸ்ரீவைஷ்ணவர்களின் தலையாய கடமையாகும். இதுவே நாம் நம் ஆசார்யருக்குச் செய்யும் அனந்தமான ப்ரணாமங்களுமாகும்!

# An Overview Of Thooppul Pillai's Tamil Prabandhams (5)

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

**13. Dhvaya-Churukku**



'Dhvayam' means 'double'. The Dhvaya Manthram, which is hailed as 'Manthra Rathnam', has two segments or sentences. The most important among the Prapaththi Manthras, the Dhvayam, may be recited by anyone any time.

This Manthram was revealed by Sriman Narayana by connecting two sentences from the Upanishads, at the instance and on the request of Sri. The first part amounts to Upaayam since it speaks about the Jiva taking refuge at the Lord's feet. The second part, as it lays the responsibility of saving the Jiva, the fruits of that endeavour with the Lord, denotes 'Upeyam'.

Ten meanings that are obtained by dissection of the Dhvaya Manthram are summarised in this Prabandham, so the name 'Dhvaya-Churukku'.

The following is an abstract of the Prabandham, Paasuram-wise:

1. Piraatti is a picture of compassion. Unable to bear the distress suffered by Jiva, She made a plea to Her Consort for their succour. The Lord was kind enough to conjoin two sentences from the Upanishads and formed the Manthra. The 10 meanings of the same are like the best of wealth among the Sri Sookthis that extol Him.
2. The six connotations of the term 'Sri' are: a) Is attained by the Chethanas and Achethanas; b) In turn, attains the Lord, for their sake; c) Listens to the rambling of Chethanas; d) Makes the Lord listen to them through Herself; e) Separates the Karmas that separate Chethanas from the Lord; f) Out of affection to the Lord as well as Chethanas, reaches the latter at the feet of the former. So, Sri of this nature permanently resides in our minds.
3. When the letter 'Sri' is joined by the suffix 'Mathup', the term 'Srimath' is derived. This implies that Sri is forever inseparable from the Lord in all His five forms. This communion always stays in our minds.
4. Sriman Narayana is ever waiting for us to attain Him. He is the first-cause of the Universe, the Master of all beings and the means and destination of salvation to all. He is the body of the whole Universe. He is the relation as spelt in the Vedas, such as mother, father, brother, support, refuge and friend. He is one who never deserts us and has a radiant form of beauty and knowledge, and is omni-present.
5. The term 'Charana' is explained here. Sriman Narayana is the Supreme Lord who adorns Srivaikuntam, manifests in four Vyuhha forms, takes Avatharas like the Mathsya, Koorma and Varaha, exists as the Antharyaami in the body of all beings and has stationed Himself in temples so as to be worshipped by all. This Lord has placed His lotus feet in our hearts.
6. The term 'Sarana' is dealt with here. Sriman Narayana will avert the Chethana from worshipping another god. He will bless us with the means and be the destination with his nectar-oozing, soft feet.

7. The Lord has made us realise that none else can be the 'Upaaya', steadied our minds and provided great faith in Him with the knowledge that He is the lone refuge. Thus, we became the object of protection to the Lord who has Srivathsam on His chest. Here, performing Prapaththi with 'Maha Viswaasam' is denoted by the verb '(Pra)Path'.

8. The first person-singular in the term 'Prapadhye' is explained in the Paasuram. Noble souls in yore performed the Karma Yoga, Jnaana Yoga and Bhakthi Yoga, as prescribed in the Vedas, but we are incapable of the same. So, we are concerned, and there is no other go for us but Sriman Narayana. From the term 'incapability', Akinchanyam is derived, and this is in context to the one who undertakes the means. This is first person-singular.

9. He is the Lord of the massive Universe, but the blemishes of the same do not get anywhere near him. We yearned to acquire the Kainkaryams that we lost when He did not favour us with His grace and also never to be subjected to that state.

10. The fourth case of the term 'Narayana'. The Lord has pledged to obviate the three kinds of distresses (Aathyaathmikam, Aadhi Bouthikam and Aadhi Dhaivikam). We have worshipped Him and prayed to Him decorating our heads with his feet which strode the three worlds and wearing the attire He had worn, seeking His Kainkaryam. This 'Kainkaryam's is derived from the fourth case 'Aaya'.

11. 'I' and 'Me' display ego and arrogance and are lowly. They can trouble us no end and push us into a deep pit. So, it is imperative to destroy them, for which we ought to know well the meaning of 'Nama:' and recite. The incomparable Lord will clear our minds of the bad qualities.

12. The final Paasuram summarises the 10 meanings – 'Sri', the 'Mathup' suffix, 'Narayana', 'Charana', 'Sarana', the verb 'Path', the first person-singular in 'Prapadhye', 'Narayana' in the second part, the fourth case in the word 'Narayana' and 'Nama:'.

Thus, the essence of Dhvaya-Chuukku is, the Jiva, who is incapable of any other means of salvation, must submit the responsibility of saving the soul and the fruits of the act, by performing the five-part Prapaththi at the feet of Sriman Narayana.

*(to be continued...)*


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

**Sponsorships and donations towards publication expenses are welcome**








**கடை ச்ரவணம்**







கடை ச்ரவணம்

